


தனி பிரதி
ரூ.10/-

**PORIYIYAL KADHIR**



# பொறியியல் கதிர்

கதிர் 45 | பாரிப்பு 15 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 2014




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.

# பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம்
# 12-ம் வகுப்பு

## பரிசு பெற்றவர்கள்



முதல் பரிசு
பா. கமலிசிந்துஜா
த/பெ. பி. பாலகங்காதரன்
சேலம் கிளை
1172/1200 - 97.67%



இரண்டாம் பரிசு
ஐ. அக்ஷய்
த/பெ. ஜி.எஸ். ஐய்யப்பன்
திருச்சி கிளை
1167/1200- 97.25%



இரண்டாம் பரிசு
எஸ். சஞ்ஜித்
தா/பெ. ஜி. ஷிலாகுமாரி
கன்னியாகுமரி கிளை
1167/1200 - 97.25%



மூன்றாம் பரிசு
வே. சூரிய நாராயணன்
த/பெ. ஆர். வேதநாராயணன்
சேலம் கிளை
1163/1200 - 96.9 %

**பொதுச் செயலாளர் மடல்**

**மடல் - 15 (2013 - 2014)**



# தொடரும்
# நம் பயணம் .......

## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

169 உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அதில் முதலில் 86 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டது. மீதமுள்ளவர்களில் 24 பொறியாளர்களுக்கு முதல் கட்டமாக பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அடுத்து 19 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதுபோக சுமார் 7 பொறியாளர்களுக்கு அயல் பணியில் உதவி செயற்பொறியாளர் பணி அமர்வு ஆணை வழங்கப்பட வாய்ப்புள்ளது.

2006 ஆம் ஆண்டிற்கு பிறகு ஊட்டுப்பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 154 இளநிலை பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய கருத்துரு கோரப்பட்டது. அதில் இன்னும் சுமார் 25 பேரின் கருத்துரு விவரங்கள் இன்னும் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை எனவே மேற்கண்ட 25 பொறியாளர்கள் உடனடியாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் கேட்கப்பட்ட பணி விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் வந்து சேர்ந்தவுடன் ஒரு 10 நாட்களுக்குள் 154 பொறியாளர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்றுத்தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

2004, 2005, 2006 ஆகிய ஆண்டுகளில் வரைதொழில் அலுவலர், ஓவர்சீயர் ஆகிய ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 57 உதவிப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட பணி விவரங்களை விரைவில் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க பொறியாளர்கள் உரிய முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இளநிலை பொறியாளரிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்ற 35 பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. பணி விவரங்களை விரைந்து அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பணி நீக்கம் செய்யப்பட்டு மறு பணி அமர்வு செய்யப்பட்ட இளநிலை பொறியாளர்களின் பணியிடைக்காலத்தை பிழை பொறுத்தல் கோப்பு மீண்டும் சில குறிப்புரைகளுடன் அரசிடமிருந்து முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு திருப்பப்பட்டு, முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து மண்டல தலைமைப்

பொறியாளர்களுக்கு சில விவரங்களுடன் பணிப்பதிவேடு அனுப்ப கோரப்பட்டு நீண்ட நாட்களாகியும் கேட்கப்பட்ட கருத்துரு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை. எனவே கேட்கப்பட்ட விவரங்களை விரைந்து அனுப்ப சம்பந்தப்படட பொறியாளர்கள் முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு சில விவரங்கள் கேட்டு அரசிடமிருந்து முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட விவரங்களுடன் கோப்பை மீண்டும் அரசுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

பொதுப்பணித்துறையில் புதிய 500 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் உருவாக்க முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அந்த கோப்பு சம்பந்தமாகவும் சில விவரங்கள் கோரப்பட்டு முதன்மை தலைமைப் பொறியாளர்அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண் 66 சம்பந்தமான வழக்கு கடந்த 15.10.2014 அன்று நீதியரசர்கள் உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் சஞ்சய் கிஷன் கவுல் மற்றும் சத்திய நாராயணா ஆகியோர் அடங்கிய பெஞ்சின் முன்பு இறுதி விசாரணை நடந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பின் நகல் கிடைக்கப்பெற்றவுடன் தீர்ப்பின் முழு விவரங்கள் தெரிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு ஆணை எண். 1 ன் படி 2006 ஆம் ஆண்டு 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. [ அவர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று மாற்றுச்சங்கம் வழக்கு தொடுத்தது. அந்த வழக்கின் இறுதி விசாரணை நீதியரசர் சிவக்குமார் அவர்கள் முன்னிலையில் ஏப்ரல் 2012-ல் இறுதி விசாரணைக்கு வந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது ] அந்த 21 உதவிப் பொறியாளர்களுக்கு பணிவரன்முறை ஆணை [ Regularisation ] சங்கத்தின் மூலமாக அண்மையில் பெற்று தந்தோம். அதை எதிர்த்து மாற்றச்சங்க சகோதரர்கள் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கை உரிய முறையில் எதிர்கொள்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் [ TNPSC ] மூலம் இளநிலை பொறியாளர்களை பணி நியமனம் செய்வது சம்பந்தமான விதித்திருத்த [ Rule Amendment ] கோப்பு முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் விதித்திருத்தம் [ Rule Amendment ] பெற்று தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை பொறியாளர்களை தேர்வு செய்ய தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். இதற்கிடையில் [ Pending Rule Amendment ] நிலுவை விதித்திருத்தம் என்ற நிபந்தனையுடன் இளநிலை பொறியாளர்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்து விடைபெறுகிறேன். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**

**தேச நலன் காப்போம்.**

**Er. D. MURUGESAN,** General Secretary
Cell Phone Nos. } 9444 999 588
9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**பெறுநர்**
முதன்மை தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு),
தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம்,
சென்னை - 5.
அய்யா,

**பொருள் :** பொதுப்பணித்துறை - தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் - பணிவரன் முறை - சம்பந்தமாக.

**பார்வை :**
1. அரசாணை எண்: 1972, பொ.ப.து., நாள்: 18.11.1985.
2. அரசாணை எண்: 3037, பொ.ப.து., நாள்: 22.12.1986.
3. அரசாணை எண்: 1 பொ.ப.து., நாள்: 02.01.1990.
4. அரசுக் கடித எண்: 26642 / பி2 - 2003 - 10 நாள்: 24.02.2006.
5. முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., அவர்களின் குறிப்பாணை எண். எஸ்2(2) / 29148 / 2004 / நாள்: 28.07.2014.
6. பொ.ப.து., பொறியாளர் சங்க க.எண்: 001 - GS./ AOE / 2014 48/ நாள்: 25.08.2014.

பார்வை 3-ல் கண்ட அரசாணையின்படி தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 21 உதவிப் பொறியாளர்கள் பார்வை 5-ன் படி பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளார்கள்.

பார்வை எண் 6-ல் கண்டபடி சகோதர சங்கம், தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு, மேற்கண்ட 21 உதவிப் பொறியாளர்களின் பணிவரன்முறை குறித்து அளித்த கடிதத்தில் தவறான பல தகவல்கள் அளித்துள்ளதை அறிய வருகின்றோம். இது குறித்த உண்மைகளைக் கீழ் கண்டவாறு முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

1. பொதுப்பணித்துறையில் தொழில்நுட்ப உதவியாளர்கள் எந்த ஒரு பணித் தொகுதியிலும் இல்லை என்று தவறாக கூறப்பட்டுள்ளது. பார்வை எண்: 1-ல் கண்ட அரசாணையின்படி தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவிக்கான பணிவிதிகள் வகுக்கப்பட்டு 01.01.1977 முதல் முன்தேதியிட்டு செயல்படுத்த ஆணைகள் வழங்கப்பட்டு செயலில் உள்ளது. எனவே தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு எந்த விதிகளும் வகுக்கப்படவில்லை என்பது தவறு.

   தமிழ்நாடு பொறியியல் சார் பணித் தொகுதியில் உள்ள பதவிகளுக்கு பொருந்தும் அனைத்து பொது மற்றும் சிறப்பு விதிகளும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவிக்கும் பொருந்தும் என்று தெளிவாக அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

2. பார்வை எண்: 2 -ல் கண்ட அரசாணையின்படி தொழில்நுட்ப உதவியாளர் பதவி பொதுப்பணித்துறையில் உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியாகும் என்று தமிழ்நாடு பொறியியற் சார் பணித் தொகுதிக்கு விதித்திருத்தம் வழங்கப்பட்டுள்ளது. இளநிலைப் பொறியாளர் பதவிக்கு ஊட்டுப் பதவிகளாக (Feeder Category) 1. ஓவர்சியர், 2. தொழில்நுட்ப உதவியாளர், 3. வரை தொழில் அலுவலர் ஆகிய மூன்று பதவிகளும் வரையறுக்கபட்டுள்ளது. உண்மை இவ்வாறு

இருக்கும் போது, தொழில்நுட்ப உதவியாளர் பதவி தமிழ்நாடு பொறியியற் பணித் தொகுதியிலோ (TNES) அல்லது தமிழ்நாடு பொறியியற் சார் பணித் தொகுதியிலோ (TNESS) இல்லை என்று தவறான தகவல் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட அரசாணைகளின்படி இளநிலைப் பொறியாளர் பதவிக்கு ஊட்டுப்பதவியாக தொழில்நுட்ப உதவியாளர் பதவியை 22.12.1986 முதல் தமிழக அரசு சேர்த்ததன் தொடர்ச்சியாக, பிரிவுப் பொறுப்பில் உள்ள மற்றொரு பதவியான உதவிப் பொறியாளர் பதவிக்கும் ஊட்டுப்பதவிகளாக (Feeder Category) வரை தொழில் அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர், ஓவர்சியர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை நிர்ணயித்து தமிழக அரசு ஆணை எண்: 1, பொ.ப.து., நாள்: 02.01.1990-ன் படி வெளியிட்டது.

மேலும், பிரிவுப் பொறுப்புக்களில் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுடன் இணைந்து பணிபுரிந்து அதே களப்பணி மற்றும் அலுவலகப்பணிகளில் நல்ல அனுபவம் பெற்று வரும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி பிரிவு அலுவலர் பதவிக் சரியான ஊட்டுப் பதவி என்பது அனைத்து மட்ட பொறியாளர்களும் நன்கு உணர்ந்த நிதர்சன உண்மையாகும்.

அரசும் அதை உணர்ந்தே தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில் அரசாணை வெளியிட்டது.

4. அரசாணை எண்: 1-க்கு விதித்திருத்தம் இன்றி தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளித்தது தவறானது எனக் கூறப்படுவது, மிகவும் தவறான, புகாராகும். அரசாணை வெளியாகி ஆண்டுகள் பல கடந்தும் விதித்திருத்தம் வழங்கப்படாமல் இருப்பதற்கு சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் பாதிக்கப்பட வேண்டும் என்பது நியாயமற்ற செயல். அரசு மட்டத்தில் சில நிர்வாகக் காரணங்களால் விதித்திருத்தம் வழங்க தாமதம் ஆன நிலையில், பார்வை எண்: 4-ல் கண்ட அரசுக் கடிதத்தின் மூலம் விதித்திருத்தம் நிலுவையில் உள்ள நிலையிலேயே அரசாணை எண்: 1-ன் படி தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும், உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அரசு தெளிவாக உத்தரவு வழங்கியுள்ளது. அக்கடிதம் முறையாக, பணியாளர் நலத்துறை, சட்டத்துறை, நிதித்துறை மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அது சட்டப்படி செல்லத்தக்க அரசுக்கடிதமாகும்.

எந்த அரசாங்கம் விதித்திருத்தம் வழங்க வேண்டுமோ, அதே அரசு விதித்திருத்தம் நிலுவையில் உள்ள நிலையில் அரசாணையின்படி பதவி உயர்வு வழங்குங்கள் என்று கூறிய பிறகு இதில் என்ன விதிமீறல் உள்ளது.

இது போன்ற சமயங்களில் அரசின் நிர்வாக காரண தாமதத்தால், தனியர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற நல்ல நோக்கத்தில் அரசு இது போன்ற இடைக்கால முடிவுகள் வழங்குவது காலம் காலமாக நடந்து வருவது என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

சகோதர சங்க கடிதத்தில் உள்ளவை, விதித்திருத்தம் இல்லை என்று கூறி, அந்த அரசாணையால் பலன் பெறக் கூடிய தொழில்நுட்ப உதவியாளர்களை அதே பதவியில் ஓய்வு பெற வைக்க வேண்டும் என்ற நோக்கம் அன்றி வேறு ஏதும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, தலைமைப் பொறியாளர் அவர்கள் நியாயமற்ற, கடிதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் சட்டப்படியும், விதிகளின்படியும், அரசாணைகளின்படியும், துறையின் நல்ல செயல்பாட்டை முன்னிட்டும் அரசு வழங்கிய அந்த உத்தரவின்படி உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவியில் இதற்கு முன் வழங்கியது போல் நிபந்தனைகளுக்கு உட்பட்டு (உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கு உட்பட்டு) பணிவரன்முறைப்படுத்த ஆணை வழங்கியது நியாயமான செயல் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்

**பொறி. த. முருகேசன்,**
**பொதுச் செயலாளர்,**
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்.**

## இரங்கல் செய்தி

மதுரை கிளை உறுப்பினர் பொறி. S. ராஜசேகர், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் மனைவி திருமதி. R. ராதா என்ற அருள்மொழி அவர்கள் 16.09.2014 அன்று இயற்கை எய்தினார்.

சென்னை கிளை உறுப்பினர் பொறி. J. கிருஷ்ண ராஜேந்திர சிங், இளம் பொறியாளர் அவர்களின்தகப்பனார் திரு. ஜானகி ராம்சிங் அவர்கள் 05.09.2014 அன்று இயற்கை எய்தினார்.

தேனி கிளை பொருளாளர் பொறி. எம். சென்ராம், உதவிப் பொறியாளர் அவர்களின் இளையமகன் எஸ். மதன் அவர்கள் 07.10.2014 அன்று அகால மரணம் அடைந்தார்.

காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறி. V. சொர்ணம், இளம் பொறியாளர் அவர்களின் தாயார் V. பொன்னம்மாள் அவர்கள் 08.10.2014 அன்று இயற்கை எய்தினார்.

மேற்கு மண்டலச் செலயர் பொறி. எஸ். ஆர். சுப்ரமணியம், இளம் பொறியாளர் அவர்களின் சித்தப்பா திரு. எல். வெங்கடசுப்ரமணியம் அவர்கள் 16.10.2014 அன்று இயற்கை எய்தினார்.

திருச்சி கிளை உறுப்பினர் பொறி. எஸ். கந்தசாமி, உதவிப் பொறியாளர் அவர்களின் அன்பு தகப்பனார் திரு. சண்முகவேல் அவர்கள் 26.10.2014 அன்று திருச்சியில் இயற்கை எய்தினார்.

சென்னை கிளை உறுப்பினர் பொறி. பி. ஆனந்தவேலு, இளம் பொறியாளர் (மின்) அவர்களின் தாயார் திருமதி. பி. சரோஜா அவர்கள் 15.10.2014 அன்று இயற்கை எய்தினார்.

சென்னை கிளை உறுப்பினர் பொறி. பி. பழனி, இளம் பொறியாளர் (மின்) அவர்களின் தாயார் திருமதி. பி. லலிதா அவர்கள் 19.10.2014 அன்று இயற்கை எய்தினார்.

சென்னை கிளை உறுப்பினர் பொறி. எம். உதயசூரியன், உதவி செயற்பொறியாளர் (மின்) அவர்களின் தாயார் எம்.வி.எம். சின்னகண்ணு அம்மாள் அவர்கள் 22.10.2014 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்ணித்துறை**

**அனுப்புநர்**
பொறி. இரா. ஏமராஜ், பி.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர்,நீஆது.,(ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

**பெறுநர்**
1. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்)மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், சென்னை - 5.
2. அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நீர்வள ஆதாரத்துறை (ம) கட்டடம்.

**கடித எண். எஸ். 2(2) / 26232 / 2008 / நாள்: 17.10.2014.**

அய்யா,

**பொருள்** : பணியமைப்பு - பொ.ப.து., - த.நா.பொ.ப.தொகுதி - வரைதொழில் அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் ஓவர்சீயர் ஆகிய பதவிகளிலிருந்து 2004 - 2007 ஆம் ஆண்டுகளில் பணிமாற்றல் அடிப்படையில் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பணிகளை வரன் முறைப்படுத்துவது - தொடர்பாக.

**பார்வை:** 1. அரசாணை (நிலை) எண். 1/பொ.ப.து./நாள். 02.01.1990.
2. அரசுக் கடித எண். 6449 / பி2/2008-1/பொ.ப.து. / நாள். 04.06.2008.
3. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.எஸ். 2(2)/26232/2008
நாள்:11.07.2008, 28.03.2011, 05.12.2013 (ம) 14.05.2014.

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி, வரைதொழில் அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர், மற்றும் ஓவர்சீயர் ஆகிய பதவிகளிலிருந்து உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பார்வை 2-ல் காணும் அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிபந்தனைகளுடன் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில், இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் ஓவர்சீயர் ஆகிய பதவிகளிலிருந்து உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு, பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய 57 உதவிப் பொறியாளர்களின் பெயர், பிறந்த தேதி, ஊட்டுப் பதவியின் பெயர் மற்றும் தற்போது பணிபுரிந்துவரும் / கடைசியாக பணிபுரிந்த அலுவலகத்தின் பெயர் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதர விவரங்களான தனியருக்கு ஊட்டுப் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள், ஊட்டுப் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள், துறை கணக்கு தேர்வு (பாகம் I (ம) II)-களில் தேர்ச்சி பெற்ற நாள், பி.இ., பட்ட படிப்பு முடித்த நாள் மற்றும் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் (மு.ப. / பி.ப.) ஆகிய விவரங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள 57 உதவிப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தும் பொருட்டு பிற்சேர்க்கையின் கலம் 5 முதல் 9 வரை உள்ள கலங்களில் கேட்டுள்ள தனியர்களின் பணி விவரங்களை பூர்த்தி செய்து மற்றும் கலம் 1 முதல் 10 வரை உள்ள அனைத்து விவரங்களையும் அவர்களது பணிப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் உண்மையானது என்று சான்றளித்து 31.10.2014-க்குள் ஒருங்கிணைந்த அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இரா. ஏமராஜ்,**
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, (ம)
தலைமைப் பொறியாளர், (பொது), பொபது.,
/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது / கண்காணிப்பாளர்

## LIST OF ASSISTANT ENGINEERS (CIVIL) WHOSE SERVICES ARE PROPOSED TO BE REGULARISED
### (Annexure to EIC., WRD, & CE ( Gl.), PWD., Chennai's Lr. No. S2(2) / 26232 / 2008 / dt. 17.10.2014)

| Sl. No. | NAME OF THE ASSISTANT ENGINEER (Thiruvalargal) | DATE OF BIRTH | FEEDER POST FROM WHICH APPOINTED AS AE (T.A, Overseer & J.D.O) | DATE OF REGULARI SATION IN THE FEEDER POST | DATE OF COMPLI TION OF PROBA TION IN THE FEEDER POST | DATE OF PASSING OF ACCOUNT TEST | | DATE OF JOINTING IN THE POST OF AE (Civil) With FN/AN | REGION/ORG. IN WHICH WORKING OR LAST SERVED | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Part - I | Part - II | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | ANBANANTHAM. K | 02.06.1968 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 2. | CHELLIAH. T | 02.02.1961 | J.D.O. | | | | | | Madurai Region (WRD) | |
| 3. | THIRUVENKADA NATHAN. S Chennai Region, Chennai | 08.09.1958 | J.D.O. | | | | | | EIC (B) & CE (B) | |
| 4. | VIJAYA. R Chennai Region, Chennai | 19.06.1967 | J.D.O. | | | | | | EIC (B) & CE (B) | |
| 5. | SEKAR. R | 05.07.1962 | J.D.O. | | | | | | Plan Formulation | |
| 6. | SENGALVARAYAN.V | 26.06.1969 | J.D.O. | | | | | | SG & SWRDC | |
| 7. | PANDI. A | 15.03.1959 | J.D.O. | | | | | | Madurai Region (WRD) | |
| 8. | RAJARATHINAM.S | 18.04.1967 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 9. | VENUGOPALAN. T | 05.06.1965 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | MURUGANANTHAM. P | 20.07.1969 | J.D.O. | | | | | | Trichy Region (WRD) | |
| 11. | KUPPUSAMI. K | 19.11.1961 | J.D.O. | | | | | | Coimbatore Region (WRD) | |
| 12. | MANIVANNAN. G | 25.06.1965 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 13. | SIVASANMUGAM.G | 12.05.1960 | J.D.O. | | | | | | Trichy Region (Buildings) | |
| 14. | RAJAM. S | 03.12.1963 | J.D.O. | | | | | | Coimbatore Region (WRD) | |
| 15. | DHANDAPANI.A | 15.06.1968 | J.D.O | | | | | | Coimbatore Region (WRD) | |
| 16. | SIVAPRAKASAM. V | 20.06.1966 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 17. | KALAIRAJAN. K | 07.03.1964 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 18. | SHANMUGAM. K | 31.07.1967 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 19. | SUNDAR. M | 12.02.1967 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 20. | KANNAN. V | 09.05.1962 | J.D.O. | | | | | | EIC (B) & CE (B) Chennai Region Chennai | |
| 21. | KANAGARATHINAM.M | 09.01.1966 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 22. | KUMAR.S | 10.07.1963 | Overseer | | | | | | Chennai Region (WRD) | |
| 23. | ILLAMARAN. R | 08.06.1962 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24. | VINOTHKUMAR. V.M | 13.04.1962 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 25. | PARANJOTHI. G | 31.12.1963 | J.D.O | | | | | | Plan Formulation | |
| 26. | BALAKRISHNAN. C | 13.03.1963 | J.D.O | | | | | | EIC (B) & CE (B) Chennai Region, Chennai | |
| 27. | MANUEL APPATHURAI. I | 14.02.1958 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 28. | MANIARASU. S | 01.10.1962 | J.D.O | | | | | | Chennai Region (WRD) | |
| 29. | KAJA MOHIDEEN. M | 06.07.1964 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 30. | PARTHASARATHY. P | 28.07.1964 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 31. | RAJASEKARAN. B | 02.04.1964 | Overseer | | | | | | Chennai Region (WRD) | |
| 32. | CHANDRAMOHAN.K | 22.06.1963 | J.D.O | | | | | | SG & SWRDC | |
| 33. | NEETHIPATHI. S | 26.05.1963 | J.D.O | | | | | | Coimbatore Region (WRD) | |
| 34. | GUNASEKARAN. G | 16.09.1959 | J.D.O | | | | | | Chennai Region (WRD) | |
| 35. | KANNAN. P | 19.05.1961 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 36. | BHARATHI. D | 22.07.1964 | J.D.O | | | | | | Madurai Region (Buildings) | |
| 37. | GANESH. R.R | 27.04.1960 | J.D.O | | | | | | Madurai Region (Buildings) | |
| 38. | MAYAN MURUGAN.S.P | 31.05.1959 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 39. | MURUGAVEL. G | 04.11.1961 | J.D.O | | | | | | EIC (B) & CE (B), Chennai Region, Chennai. | |
| 40. | SIVAGURUNATHAN.M | 23.05.1962 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 41. | RAJASEKARAN. T | 15.05.1961 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 42. | PARTHIBAN. P | 15.03.1966 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 43. | DAMODHARAN. R | 05.03.1965 | Overseer | | | | | | Chennai Region (WRD) | |
| 44. | MANIKANDAN. S | 08.02.1962 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 45. | ELANGO. V | 19.04.1964 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 46. | SENTHILKUMAR. D | 11.06.1965 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 47. | MURALIDHARAN.C.S | 12.07.1967 | Overseer | | | | | | Trichy Region (WRD) | |
| 48. | PEER APPA. M | 10.04.1962 | J.D.O | | | | | | Madurai Region (Buildings) | |
| 49. | KANNAN. R | 02.05.1976 | J.D.O | | | | | | Madurai Region (WRD) | |
| 50. | SUNDAR. M | 23.07.1966 | J.D.O | | | | | | Madurai Region (Buildings) | |
| 51. | SHAJAHAN. K | 27.03.1961 | J.D.O | | | | | | EIC (B) & CE (B), Chennai Region, Chennai | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 52. | JAMAL MOHIDEEN. M | 01.04.1967 | J.D.O | | | | | | Madurai Region (Buildings) | |
| 53. | VIJI. M.P.K | 29.07.1962 | J.D.O | | | | | | DRCS (WRD) | |
| 54. | MURUGANANDHAM.J | 08.12.1973 | J.D.O | | | | | | SG & SWRDC | |
| 55. | THILAK. G.J | 23.11.1975 | J.D.O | | | | | | Coimbatore Region (WRD) | |
| 56. | THANGAMUTHU. R | 14.04.1969 | J.D.O | | | | | | Trichy Region (WRD) | |
| 57. | DHANASEKARAN. P | 14.06.1963 | J.D.O. | | | | | | Trichy Region (WRD) | |

R. Emaraj,
Engineer-in- Chief, WRD &
Chief Engineer (Gl.) PWD

/ Forwarded by Order /

SUPERINTENDENT

## சேலம் கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்





**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**

**அனுப்புநர்**
பொறி. இரா. ஏமராஜ், பி.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர்,நீஆது.,(ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

**பெறுநர்**
1. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்)மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், சென்னை - 5.
2. அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நீர்வள ஆதாரத்துறை (ம) கட்டடம்.
3. தலைமைப் பொறியாளர், தொழில்நுட்பக் கல்வித்துறை, கிண்டி, சென்னை - 25.

**கடித எண். எஸ். 2(2) / 40254 / 2010 / நாள்: 16.10.2014.**

அய்யா,

**பொருள்:** பணியமைப்பு - பொ.ப.து. த.நா.பொ.ப.தொகுதி - இளநிலை பொறியாளர் பதவியிலிருந்து பதவிப் பெயர் மாற்றம் மூலம் உதவிப் பொறியாளராக நியமனம் செய்யப்பட்டவர்கள் - உதவிப் பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - விவரங்கள் கோரி சுற்றுக்கு விடுதல் - தொடர்பாக.

**பார்வை:** 1. அரசுக் கடித எண்.1910/ஏ1/2012 -13/ பொ.ப.து/ நாள்: 08.06.12.
2. இவ்வலுவலகக் கடித எண். எஸ்2(2)/40254/2010 நாள்: 13.08.2013.
3. அரசுக் கடித எண். 21340/ஏ1/2013-2/பொ.ப.து./நாள்: 20.03.2014.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். எஸ். 2(2)/40254/2010/ நாள்: 04.09.2014.

பார்வை 1 மற்றும் 3-ல் காணும் அரசுக் கடிதங்களில், தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இளநிலை பொறியாளர் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம் (Recruitment by Transfer) உதவிப் பொறியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களில், பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக முதற்கட்டமாக 6 உதவிப் பொறியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் துவக்கி (பணிவரன்முறை செய்து) ஆணைகள் வழங்கப்பட்டன.

தற்போது பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய 35 உதவிப் பொறியாளர்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய 35 உதவிப் பொறியாளர்களின் பெயர், பிறந்த தேதி, ஊட்டுப் பதவியின் பெயர் மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகத்தின் பெயர் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதர விவரங்களான தனியருக்கு ஊட்டுப் பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள், ஊட்டுப் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள், துறை கணக்கு தேர்வு (பாகம் I (ம) II)-களில் தேர்ச்சி பெற்ற நாள், பி.இ., பட்ட படிப்பு முடித்த நாள் மற்றும் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் (மு.ப. / பி.ப) ஆகிய விவரங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள 35 உதவிப் பொறியாளர்களுக்கு அப்பதவியில் தகுதிகாண் பருவம் தொடங்கும் பொருட்டு, அதாவது உதவிப் பொறியாளர் பணிகளை வரன்முறைப்படுத்தும் பொருட்டு பிற்சேர்க்கையின் கலம் 5 முதல் 9 வரை உள்ள கலங்களில் கேட்டுள்ள தனியர்களின் பணி விவரங்களை பூர்த்தி செய்து மற்றும் கலம் 1 முதல் 10 வரை உள்ள அனைத்து விவரங்களையும் அவர்களது பணிப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து கொடுக்கப்பட்ட விவரங்களனைத்தும் உண்மையானது என்று சான்றளித்து 31.10.2014-க்குள் ஒருங்கிணைந்த அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இரா. ஏமராஜ்,**
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆது(ம)
தலைமைப் பொறியாளர், (பொது), பொபது.,
/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /
கண்காணிப்பாளர்

## LIST OF RE - DESIGNATED ASSISTANT ENGINEERS (CIVIL) WHOSE SERVICES ARE PROPOSED TO BE REGULARISED

### (Annexure to Engineer-in-Chief, WRD & Chief Engineer (General) PWD., Lr. No. S2(2) / 40254 / 2010 / Dated: 16.10.2014)

| Sl. No. | NAME OF THE ASSISTANT ENGINEER (Thiru/Tmt/Selvi) | DATE OF BIRTH | FEEDER POST FROM WHICH APPOINTED AS A.E. | DATE OF REGULARISATION IN THE FEEDER POST (J.E.) | DATE OF COMPLETION OF PROBATION THE FEEDER POST | DATE OF PASSING ACCOUNT TEST PART I & II | DATE OF PASSING B.E.(CIVIL) DEGREE | DATE OF JOINING IN THE POST OF AE(CIVIL) | REGION IN WHICH WORKING |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1. | G. Annamalai | 25.05.1965 | Junior Engineer | | | | | | CE (WRD), Trichy |
| 2. | S. Shanmuganathan | 19.05.1962 | Junior Engineer | | | | | | EIC(B) CE (Bldgs) Chennai Region |
| 3. | R.Dhakshanamoorthy | 29.06.1963 | Junior Engineer | | | | | | Director of Tech Education Chennai |
| 4. | K. Ramanathan | 12.04.1962 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 5. | P. Mariselvan | 15.06.1963 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 6. | S. Veeramani | 14.03.1965 | Junior Engineer | | | | | | CE (WRD) Chennai |
| 7. | S. Karthikeyan | 02.04.1965 | Junior Engineer | | | | | | CE (SG & S.W.R.D.C) |
| 8. | S. Nagarajan | 13.05.1962 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Trichy |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | R. Vedanarayanan | 20.10.1964 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 10. | S. Balasubramanian | 04.06.1965 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Trichy |
| 11. | A. Poochandran | 09.12.1957 | Junior Engineer | | | | | | CE (S.G. & S.W.R.D.C) |
| 12. | R. Thenmozhi | 05.06.1961 | Junior Engineer | | | | | | CE (P.F) |
| 13. | V. Babu | 28.05.1959 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 14. | M.M. Premkumar | 11.03.1960 | Junior Engineer | | | | | | Director of Tech Education Chennai |
| 15. | C. Velu | 13.05.1966 | Junior Engineer | | | | | | EIC (Bldgs) CE (Bldgs) Chennai Region |
| 16. | A. Xaviersam | 06.07.1955 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Madurai |
| 17. | S. Jegadeesan | 24.04.1963 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 18. | S. Pandiyarajan | 05.04.1964 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Madurai |
| 19. | A. Balu | 27.05.1966 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Madurai |
| 20. | P. Anbarasan | 25.10.1965 | Junior Engineer | | | | | | CE (DR & CS) Chennai |
| 21. | G. Thiruvalluvan | 15.10.1967 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 22. | P. Rathinavelu | 19.04.1971 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 23. | T. Chandrasekaran | 15.10.1961 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24. | R. Thamilarasan | 16.04.1970 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 25. | P. Selvaraj | 05.02.1965 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Madurai |
| 26. | D. Murugesan | 15.02.1965 | Junior Engineer | | | | | | EIC (Bldgs) CE (Bldgs) Chennai Region |
| 27. | K. Ravi | 22.10.1961 | Junior Engineer | | | | | | EIC (Bldgs) CE (Bldgs) Chennai Region |
| 28. | R. Venkatesa Babu | 14.05.1967 | Junior Engineer | | | | | | EIC (Bldgs) CE (Bldgs) Chennai Region |
| 29. | K. Sugumaran | 20.02.1959 | Junior Engineer | | | | | | CE (Bldgs) Trichy |
| 30. | A. David Anbalagan | 12.05.1956 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 31. | S. Murugesan | 12.04.1964 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 32. | R. Sahadevan | 14.04.1966 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 33. | R. Saravana Murugan | 22.03.1965 | Junior Engineer | | | | | | CE (WRD) Madurai |
| 34. | S. Mayilvahanan | 08.01.1966 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |
| 35. | A. Rajendran | 19.07.1960 | Junior Engineer | | | | | | CE (WRD) Trichy |

R. Emaraj,
Engineer-in-Chief, WRD &
Chief Engineer (Gl.) PWD

/ Forwarded by Order /

SUPERINTENDENT

**Office of the Chief Engineer (Operation and Maintenance), PWD / WRD, Chepauk, Chennai - 5.**

Present: Er. R. Jayapragasam, B.E.,
Joint Chief Engineer (O&M)

**Procd. No. A1 / 5153 / 13-2** **Dated: 28.11.2013.**

**Sub:** Revised Scales of Pay Rules 2009 - Re - fixation of Pay based on the recommendations of the Pay Grievance Redressal Cell - Ordered.

**Ref:** G.O. Ms. No. 237 Finance (PC) Dept., Dated: 22.07.2013.

******

Based on the Government order in the reference cited, the pay of Tmt. P.V. Lalitha, Assistant Executive Engineer of this office is re-fixed as follows, with effect from 24.06.2009 FN in which the individual moved to Spl Grade in the post of Junior Engineer is as follows.

| **Moved to Spl. Grade in the post of Junior Engineer on 24.06.2009 FN** | |
|---|---|
| Pay as on 23.06.2009 | Rs. 17920/- + GP 4600/-<br>PB 9300-34800+GP 4600 |
| Add 3% + 3% increment | Rs.680/-+Rs.680/-=Rs.1360/- |
| **Pay fixed on 24.06.2009 in JE (Spl. Gr)** | **Rs. 19280/- + GP 4600/-** |
| **Add:** Increment on 01.04.2010 at 3% | Rs. 720/- |
| Pay after sanction of increment on 01.04.2010 | Rs. 20000/- + GP 4600/- |
| **Add:** Increment on 01.04.2011 at 3% | Rs. 740/- |
| Pay after sanction of increment on 01.04.2011 | Rs. 20740/- + GP 4600/- |
| **Add:** Increment on 01.04.2012 at 3% | Rs. 760/- |
| Pay after sanction of increment on 01.04.2012 | Rs. 21500/- + GP 4600/- |
| **Promoted as Assistant Executive Engineer on 15.11.2012 FN pay fixed as per individual option as per rule 22 1 (a)(1)** | |
| Scale of Pay of Junior Engineer | PB 9300-34800 + GP 4600 |
| Scale of pay of Assistant Executive Engineer | PB 15600 - 39100 + GP 6600 |
| Pay as on 14.11.2012 (9300-34800+GP 4600) | Rs. 21500/- + GP 4600/- |
| Grade Pay difference (6600 - 4600) | GP 2000/- |
| Pay fixed on 15.11.12 in AEE post as per 22(1)(a)(1) | Rs. 21500/- + GP 6600/- |

| | |
|---|---|
| **Pay fixed as per rule 22(b) after getting increment in lower post** | |
| Pay as on 01.04.2012 in the lower post (JE) | Rs. 21500/- + GP 4600/- |
| **Add:** lower post annual increment at 3% 01.04.13 | Rs. 790/- |
| Pay after sanction of increment on 01.04.2013 | Rs. 22290/- + GP 4600/- |
| **Add:** 3% increment for promotion Assistant Executive Engineer on 01.04.2013 | Rs. 810/- |
| Grade pay difference (6600 - 4600) | Rs. 2000/- |
| Pay fixed on 01.04.2013 in the Assistant Executive Engineer post | Rs. 23100/- + GP 6600/- |
| **Net increment date** | **01.04.2014** |

The individual is entitled to draw the arrears of Pay and Allowances with effect from 01.04.2013 as per the Government order.

**Sd/- R. Jayapragasam, 28.11.13**
**Joint Chief Engineer (O&M)**

To,
The Individual
Copy to bill (2 copies)
Copy to Pay and Accounts Officer (East), Egmore, Chennai - 8.

**for Joint Chief Engineer (O&M)**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மையச்சங்க பொறுப்பாளர் பொறி. ஆ. நடராஜன், செயலாளர்-நிதி அவர்கள் கோவை - பொள்ளாச்சி கட்டிட நன்கொடையாக ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கிளைச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மையச்சங்க பொறுப்பாளர் பொறி. எஸ்.ஆர்.சுப்ரமணியன், மேற்கு மண்டல செயலாளர் அவர்கள் கோவை - பொள்ளாச்சி கட்டிட நன்கொடையாக ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கிளைச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# இயங்கும் உலகம்

## தருமபுரி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை தருமபுரி கிளை பொதுக்குழு கூட்டம் தருமபுரியில் 02.10.2014 வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் இறை வணக்கத்துடன் துவங்கியது. கிளை தலைவர் உ. நகுலன் தலைமையில் உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கிளை செயல்பாடுகள் பற்றி கிளை செயலர் பொறியாளர். எஸ். கிருஷ்ணன் உரையாற்றினார். பின்னர் கிளை வரவு செலவு கணக்கினை வெங்கடேசன் அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். பொதுச் செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் மையச்சங்க செயல்பாடுகள் குறித்து விரிவாக உரையாற்றினார். உறுப்பினர்கள் கோ. சேதுமாதவன், எஸ். கிருஷ்ணன், P. நாகராஜ், எல்.எஸ். முரளிகிருஷ்ணன், எம். பாலகிருஷ்ணன் ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு பொதுச் செயலாளர் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் அவர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் 2014 - 2015 ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர் தேர்தலை பொதுச் செயலாளர் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் ஆகியவர்களால் நடத்தப்பட்டது. கீழ்கண்ட பொறியாளர்கள் ஏகமனதாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களுக்கு பொதுச் செயலாளரால் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. உ. நகுலன், DCE, BE<br>உதவி செயற்பொறியாளர்,<br>தொழில்நுட்ப கல்வி உபகோட்டம், தருமபுரி. |
| உபதலைவர் | : | பொறி. ஏ. செல்வராஜ், DCE, BE<br>உதவி செயற்பொறியாளர்,<br>வரட்டாறு நீர்த்தேக்கத் திட்ட உபகோட்டம்,<br>அரூர் - 636 903. |
| செயலாளர் | : | பொறி. எஸ். கிருஷ்ணன், DCE<br>இளம் பொறியாளர்,<br>பாசனப்பிரிவு, கிருஷ்ணகிரி. |
| இணை செயலாளர் -1 | : | பொறி. எம். பாலகிருஷ்ணன், DCE, BE., ME<br>உதவிப் பொறியாளர்,<br>கட்டிட கட்டுமான மற்றும் பராமரிப்பு,<br>கிருஷ்ணகிரி. |
| இணை செயலாளர் -2 | : | பொறி. கோ. சேதுமாதவன், DEE., BE<br>தொழில்நுட்ப உதவியாளர்,<br>சின்னாறு உபகோட்டம், தருமபுரி. |

பொருளாளர் : பொறி. தி. வெங்கடேசன், AMIE., MIE., MBA
உதவிப் பொறியாளர்,
கட்டிட கட்டுமான மற்றும் பராமரிப்பு,
(மருத்துவப்பணிகள்), தருமபுரி.

பின்னர் இணை செயலாளர் எம். பாலகிருஷ்ணன் நன்றி நவில கூட்டம் இனிதே நினைவுற்றது. பின்னர் கிழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நூற்றாண்டு விழாவை மிகச்சிறப்பாக நடத்தி கொடுத்த மைய சங்க பொறுப்பாளர்களை இக்கிளை பாராட்டுகிறது.

2. அரசு ஆணை 1 மற்றும் 66 உரிய விதி திருத்தம் பெற்று தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இளம் பொறியாளர்கள் மற்றும் பதவி மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளகள் பணிவரன்முறை விரைவில் பெற்று தர கிளை, மைய சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

4. இக்கிளை உறுப்பினர் கோ. சேதுமாதவன் அவர்களுக்கு பதவி உயர்வு பெற்றுதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. அரசு ஆணை எண். 1 நாள்: 02.01.1990 மூலம் பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை மாற்று சங்கம் தடுப்பார்களேயானால் 2007 முதல் பணியமர்த்தப்பட்ட TNPSC உதவிப் பொறியாளர்களுக்கு துறை மாற்ற முன்மொழிவுக்கு நமது சங்கம் மறுப்பு தெரிவித்து நிறுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

6. தருமபுரி இந்தியன் வங்கியில் உள்ள சேமிப்பு கணக்கு மற்றும் நிரந்தர வைப்பு கணக்கை இயக்க புதிய பொருளாளர் மற்றும் செயலாளர் கூட்டாக இயக்க இக்கிளை தீர்மானிக்கிறது.

**சேலம் கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேலம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 11.10.2014 சனிக்கிழமையன்று காலை 11.30 மணியளவில் சேலம் கிளை கட்டிடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. சேலம் கிளையின் தலைவர் பொறி. பி. சண்முகம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தினார். கூட்டத்தில் பொங்கும் நிதி செயலர் பொறி. என். புண்ணியகோட்டி அவர்களும் மேற்கு மண்டலச் செயலாளர் பொறி.எஸ்.ஆர்.சுப்ரமணியம் அவர்களும் சிறப்பு அழைப்பாளராக மையச்சங்கம் சார்பில் கலந்து கொண்டனர். பொறி. பி. கண்ணன், கிளையின் இணைச் செயலாளர் அவர்கள் வரவேற்புரை ஆற்றியபின் மறைந்த பெரியோர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பொறி.பி.சண்முகம் கிளைத் தலைவர் அவர்கள் தலைமையுரையாற்றினார். பொறி. எஸ். பாண்டியன் கிளையின் பொருளாளர் அவர்கள் மூலம் கிளைச் சங்க வரவு செலவு கணக்குகள் வாசித்து ஒப்புதல் பெறப்பட்டது. தொடர்ந்து பொறி. இரா. வேதநாராயணன் கிளைச் செயலாளர் அவர்கள் கிளையின் செயல்பாடுகள், நூற்றாண்டு விழா சிறப்புடன் செயல்படுத்தியதற்கு மையச்சங்க பொறுப்பாளர்களுக்கு நன்றி கூறல் மற்றும் உறுப்பினர் அனைவரும் கூட்டத்திற்கு தவறாமல் வருகை தரவேண்டியும் உரையாற்றினார். மேற்கு மண்டலச் செயலாளர் பொறி.எஸ்.ஆர்.சுப்ரமணியம் அவர்களின் உரைக்குப்பின் பொங்கும் நிதி செயலர் பொறி.என்.புண்ணியகோட்டி அவர்களும் மையச்சங்க செயல்பாடுகள் மற்றும்

நூற்றாண்டு விழா, வழக்குகளின் தற்போதைய நிலை, சங்க வளர்ச்சிக்கு அறிவுரை குறித்து விரிவாக பேசினார். கூட்டத்தில் கலந்துகொண்டு பொறி. எம் பலராமன் மூத்தப் பொறியாளர் அவர்கள் பேரவை செயல்பாடுகள், நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்தியதற்கு நன்றி தெரிவித்து பாராட்டி பேசி அமர்ந்தார். உறுப்பினர்களின் கேள்வி நேரத்தில் பொறி. ஆர். வெங்கடாசலம் உதவி செயற்பொறியாளர், பொறி. சக்திவேல் உதவிப்பொறியாளர் (மின்) அவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு மையச்சங்கம் சார்பில் பதிலளிக்கப்பட்டது. 2014-15 ம் ஆண்டுக்கான கிளைச்சங்க நிர்வாகிகள் தேர்தல் மையச்சங்க பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கீழ்கண்டவர்கள் புதிய பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| கிளைத் தலைவர் | : பொறி. பி. சண்முகம், உதவி செயற்பொறியாளர் |
| கிளை உபத்தலைவர் | : பொறி. இரா. கோவலன், உதவி செயற்பொறியாளர் |
| கிளை செயலர் | : பொறி. இரா. வேதநாராயணன்,உதவிப் பொறியாளர் |
| கிளை இணைச் செயலர் -1 | : பொறி. பி. சக்திவேல், உதவிப் பொறியாளர் (மின்) |
| கிளை இணைச் செயலர் -2 | : பொறி. எஸ்.எஸ். சாந்தி, உதவிப் பொறியாளர் |
| கிளை பொருளாளர் | : பொறி. எஸ் பாண்டியன், இளம் பொறியாளர் |

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் சங்க நிர்வாகிகளை பொறி. தி. உதயகுமார் உதவி செயற்பொறியாளர் அவர்கள் வாழ்த்தி பேசினார். இறுதியாக பொறி. பி. சக்திவேல் கிளையின் இணைச் செயலர் அவர்கள் நன்றிகூற கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு விழா சிறப்பாக ஏற்பாடுகள் செய்து செயல்படுத்தியதற்கும், விழாமலர் நினைவுபெட்டகமாக சிறப்புடன் தயாரித்து அளித்ததற்கும் மையச்சங்க பொறுப்பாளர்கள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கு சேலம் கிளையின் சார்பில் மனமார்ந்த பாராட்டுதல்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2. எஞ்சியுள்ள அனைத்து இளம் பொறியாளர்களுக்கும் பணிவரன்முறை செய்துதர கோருதல்.

3. அரசாணை எண். 1 மற்றும் 66 க்கு விதித்திருத்தம்.

4. இளம் பொறியாளர் பதவியில் இருந்து உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு விரைவில் பணிவரன்முறை பெற்றுத்தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. இந்தியன் வங்கி சேலம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சேலம் ஆகிய வங்கிகளில் உள்ள கிளைச்சங்கம் பெயரிலான வங்கிகணக்குகள் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் மற்றும் பொருளாளர் கூட்டாக செயல்படுத்த இக்கிளை ஒப்புதல் அளிக்கிறது.

6. அரசு ஆணை எண். 1 நாள்: 02.01.1990 மூலம் பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை மாற்று சங்கம் தடுப்பார்களேயானால் 2007 முதல் பணியமர்த்தப்பட்ட TNPSC உதவிப் பொறியாளர்களுக்கு துறை மாற்ற முன்மொழிவுக்கு நமது சங்கம் மறுப்பு தெரிவித்து நிறுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

7. கிளைச்சங்க உறுப்பினர்கள் பொறி. இராசாராம் இளம்பொறியாளர் அவர்களின் தந்தையார் மறைவுக்கும், பொறி. டி.எஸ். கோபிநாத் உதவிப் பொறியாளர் அவர்களின் தாயார் மறைவுக்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தஞ்சாவூர் கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழு மற்றும் கிளையின் 2014 - 2015 ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்வும் 11.10.2014 காலை 10.30 மணியளவில் "**பொறியியல் இல்லம்**" தஞ்சாவூரில் தலைவர் பொறி. என். வேணுகோபாலன் அவர்களின் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர், கிளையின் தலைவர் பொறி. என். வேணுகோபாலன் வரவேற்புரை ஆற்றினார். கிளையின் செயல்பாடுகள் குறித்து, கிளையின் செயலாளர் பொறி. என். நாகராஜன் மையசங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். மையசங்க செயல்பாடுகள் குறித்து கிழக்கு மண்டலச் செயலாளர் பொறி. ஆர். வேதமூர்த்தி விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநில துணைத்தலைவர் பொறி. எம். பஞ்சவர்ணம் மையசங்கத்தில், எடுக்கப்பட்ட, எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தார். உறுப்பினர்கள், பொறி. ஆர். இளமாறன், பொறி. எஸ். அய்யனார், பொறி. ஏ. ரபீந்திரன், பொறி.கே.இந்திராமணி மற்றும் பொறி. வி. சிவப்பிரகாசம் தத்தமது கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அதன் பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்பு 2014 - 2015 ஆண்டிற்கான கிளைத் தேர்தல் நடைபெற்று, கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. ஆர். வேதமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் |
| துணைத்தலைவர் | : | பொறி. ஆர். இளமாறன், உதவி செயற்பொறியாளர் |
| செயலாளர் | : | பொறி. என். நாகராஜன், உதவி செயற்பொறியாளர் |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. ஜி. லலிதா, இளம் பொறியாளர் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. கே. சோமசுந்தரம், உதவிப் பொறியாளர் |
| பொருளாளர் | : | பொறி. வி. சிவப்பிரகாசம், உதவிப் பொறியாளர் |

கிளையின் துணைத்தலைவர், பொறி. கே. சோமசுந்தரம் நன்றிகூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**தீர்மானங்கள்:**

1. நூற்றாண்டு விழாவினை மிகமிக சிறப்பாக நடத்திய மைய சங்க பொறுப்பாளர்களையும் அதற்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய ஏனைய பொறுப்பாளர்களையும் மனமாற தஞ்சை கிளை பாராட்டுகிறது.

2. மேற்கணிகர் (Overseer), இளநிலை வரைவாளர், தொழில் அலுவலர் பதவி மூலம் உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு (2004 - 2005 வரை) பணிவரன்முறை செய்ய மையசங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக்கொள்கிறது.

3. டெல்டா மாவட்டத்தில், பிரிவு அலுவலகத்தில் காலியாக உள்ள பாசன ஆய்வாளர் பதவியை நிரப்பிட நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை மையசங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

4. பொதுப்பணித்துறையில், நீர்வள ஆதார அமைப்பில், பட்டய பொறியாளருக்காக உள்ள மேற்கணிகர் (Overseer) பதவியினை பட்டய பொறியாளருக்கே மீண்டும் பெற்றுதர நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

5. அரசாணை எண்: 66 க்கு நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்கில் மைய சங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக்கொள்கிறது.

6. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 5th Vacancy மூலம் மேற்கணிகர் (Overseer) / வரைவாளர் தொழில் அலுவலர்களுக்கு உரிய பங்கினை பெற்றுத்தர மைய சங்கத்தை தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

7. உதவிப் பொறியாளர் முதுநிலை பட்டியலில் (Seniority List) உடன் பெற்றுத்தர மைய சங்கத்தை தஞ்சை கிளை கேட்டுக்கொள்கிறது.

8. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியினை பெற்றுத்தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக்கொள்கிறது.

9. மண்டல செயலாளர்களை அந்தெந்த மண்டலத்திலிருந்தே தேர்ந்தெடுக்க ஆவன செய்யுமாறு மைய சங்கத்தை தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

**திருச்சி கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளையின் பொதுக்குழுச்கூட்டம் 18.10.2014 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் ஹம்ஜா கேசவராவ் - அடைக்கலதுரை அரங்கில் நடைபெற்றது. இப்பொதுக்குழுக் கூட்டத்திற்கு கிளையின் தலைவர் பொறி. சிவக்குமார் தவிர்க்க முடியாத காரணத்தினால் கலந்துகொள்ள இயலாததையடுத்து கிளையின் செயலாளர் பொறி. கே.ஆர். ஜெயராமன் அவர்களைத் தலைமையேற்று நடத்திக்கொடுக்க பொறி. தியாகராஜன் முன்மொழிய பொறி. தங்கையன் வழிமொழிந்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக மையச்சங்கத்தில் இருந்து பொங்கும் நிதிச் செயலாளர், பொறி. என். புண்ணியகோட்டி அவர்களும் கிழக்கு மண்டல செயலாளர் பொறி. ஆர். வேதமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டு கிளையின் பொதுக்குழுக் கூட்டத்தை சிறப்பித்தனர். பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களை கிளையின் இணைச் செயலாளர் பொறி. எஸ். தங்கையன் வரவேற்று பேசினார். அடுத்து கிளையின் உறுப்பினர் பொறி. அடைக்கண் அவர்களது தந்தையின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து கிளையின் தலைவர் மற்றும் செயலாளர் உரையாக பொறி. கே. ஆர். ஜெயராமன் அவர்கள் தமது உரையில் பாரம்பரியமிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழா கடந்த 05.09.2014 அன்று மிகச் சீறிய முறையில் மிகச்சிறப்பான ஏற்பாடுகளை செய்து முடித்து வரலாற்றுச் சாதனை படைத்த தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் மற்றும் மாநிலப் பொதுச்செயலாளர் உள்ளிட்ட அனைத்து மையச்சங்கப் பொறுப்பாளர்கள், கிளைப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் திருச்சி கிளையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

சிறப்பு அழைப்பாளர்களாக வருகை புரிந்த பொங்கும்நிதி செயலர் மற்றும் கிழக்கு மண்டலச் செயலர் ஆகியோர் கிளையின் சார்பாக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து கிழக்கு மண்டலச் செயலாளர் தமது உரையில் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்ததற்கும் திருச்சி கிளையில் இருந்து உறுப்பினர்கள் தமது குடும்ப நபர்களுடன் தனிப்பேருந்து மூலம் வந்து கலந்து கொண்டு சிறப்பித்ததற்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். தனிப்பேருந்து குளிர்சாதன வசதியுடன் ஏற்பாடு செய்து நல்கிய நல்ல உள்ளங்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். மேலும் மையச் சங்கம் மேற்கொண்டு வரும் சங்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் மையச்சங்கச் சிறப்பு அழைப்பாளர் பொங்கும்நிதி செயலாளர் பொறி. என். புண்ணியகோட்டி அவர்கள் தமது உரையில் நூற்றாண்டு விழாச் சிறப்பு ஏற்பாடுகள் குறித்தும், மையச்சங்க மற்றும் கிளைப் பொறுப்பாளர்களின் அயராத ஒத்துழைப்பு குறித்தும், சிறப்பாகப் பேசி தமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். பின்னர் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டு இடைவிடாத நடவடிக்கைகளை விரிவாகவும், எளியமுறையிலும் உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் உறுப்பினர்கள் வருகை குறித்து பேசுகையில் உறுப்பினர்கள் இன்னும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு அதிக அளவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வலியுறுத்தினார். கிளையின் தலைவர் மற்றும் இணைச் செயலாளர்-1 ஆகியோர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ளாததற்கு தனது வருத்தத்தினையும் தெரிவித்தார்.

பின்னர், உறுப்பினர்கள், கருத்துக்கள் பகுதியில் கிளையின் உறுப்பினர் பொறி. ஆர். தயாளகுமார் அவர்கள் பேசுகையில் வரலாறு காணாத வகையில் அகிலமே போற்றும் வகையில் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை திறம்பட நடத்தி சாதனைபுரிந்த தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பொறி. த. முருகேசன் மற்றும் அவர்தம் மையச்சங்கப் பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

அதனையடுத்து கிளையின் உறுப்பினர்கள் பொறி. ஆர்.தியாகராஜன் மற்றும் பொறி. என். முருகேசன் ஆகியோர் கிளை உறுப்பினர்கள் வருகை குறித்தும் சங்க நடவடிக்கைகள் குறித்தும் நீர்வள ஆதாரத்துறை மற்றும் கட்டடத்துறை உறுப்பினர்கள் தவறாது அதிக அளவில் கலந்து கொள்ளக் கேட்டுக் கொண்டார்.

உறுப்பினர் கருத்துக்களுக்கும், அவர்களது கேள்விகளுக்கும் பொங்கும் நிதிச் செயலாளர் விரிவாக பதிலுரைத்தார். அதன் பின்னர் திருச்சி கிளையின் 2014 - 2015 ஆண்டிற்கான கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் நடத்தப்பட்டது. கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தலுக்கு பொங்கும் நிதிச் செயலாளர் திரு. என். புண்ணியகோட்டி அவர்களும் மற்றும் கிழக்கு மண்டலச் செயலாளர் திரு. ஆர். வேதமூர்த்தி அவர்களும் தேர்தல் அதிகாரிகளாக இருந்து சிறப்பான முறையில் தேர்தலை நடத்தி கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | : பொறி. ஆர். தயாளகுமார், உதவி செயற்பொறியாளர் |
| துணைத்தலைவர் | : பொறி. ஆர். தியாகராஜன், உதவிப் பொறியாளர் |
| செயலாளர் | : பொறி. கே. ஆர். ஜெயராமன், உதவிப் பொறியாளர் |
| இணைச் செயலாளர் 1 | : பொறி. கே. ராமச்சந்திரன், இளம் பொறியாளர் |
| இணைச் செயலாளர் 2 | : பொறி. எஸ். தங்கையன், இளம் பொறியாளர் |
| பொருளாளர் | : பொறி. எஸ். சி.எஸ். முரளிதரன், உதவிப் பொறியாளர் |

புதிய பொறுப்பாளர்கள் தங்களது நன்றிகளை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். கிளையின் புதிய துணைத் தலைவர் பொறி. ஆர். தியாகராஜன் தனது நன்றியினை தெரிவித்துப் பேசுகையில் கிளைக் கூட்டத்திற்கு முன்புறத்தில் காம்பவுண்ட் சுவரினை தனது அன்பளிப்பாக கட்டி தருவதாகக் ஒப்புக் கொண்டார்.

மேலும் பொங்கும் நிதிச் செயலாளர் பேசுகையில் கிளைக் கட்டிடத்திற்கு சிறு சிறு பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் செய்து பயன்பாட்டில் கொண்டு கிளைப் பொறுப்பாளர்களை கேட்டுக்கொண்டார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களை பொங்கும் நிதிச் செயலாளர், கிழக்கு மண்டல செயலாளர், பொறி. ஏ.அடைக்கண், பொறி. என். முருகேசன், பொறி. வி. வேதரத்னம் ஆகியோர் பாராட்டிப் பேசினார். திருச்சி கிளையின் சார்பாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்.**

1. வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை அயராது முயற்சி செய்து தமிழகமே நிமிர்ந்து பார்க்கின்றவகையில் சிறப்புற நடத்தி வெற்றி பெறச்செய்த மையச்சங்கப் பொறுப்பாளர்களுக்கு இந்த கிளை நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

2. பொதுப்பணித்துறையில் முதல் பதவி உயர்வின்போது ஆணை வழங்கப்பட்டு உடனடியாக (குறிப்பிட்ட தேதிக்குள்) பணி நியமனம் செய்யப்பட்ட இடத்திற்கு பணியில் சேர வேண்டும். அவ்வாறு பணியில் சேராமல் முன்பு பணிபுரிந்த பதவியில் தொடர்ந்து பணியாற்றி வரும் பொறியாளர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தக் கிளை வலியுறுத்துகிறது.

3. குறிப்பிட்ட தேதிக்குள் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகள் விடுவிக்கவேண்டும். அவ்வாறு விடுவிக்கப்படாமல் தொடர்ந்து பணிபுரிய அனுமதித்து வரும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தக்கிளை வலியுறுத்துகிறது.

4. பதவி உயர்வின்போது விடுவிக்கப்பட்ட பொறியாளர்கள், உடனடியாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட இடத்தில் பணியேற்காமல் விடுப்பில் செல்லும் பொறியாளர்களுக்கு எந்த தேதியில் பதவி உயர்வின்போது பணி மேற்கொள்ளுகிறார்களோ அந்த தேதியில் இருந்து (Date of joining on first promotion post) Seniority வழங்கப்படவேண்டுமென இந்த கிளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

பின்னர் பொறி. கே. ராமச்சந்திரன், இணைச் செயலாளர் - 1 நன்றி நவில இரவு சிற்றுண்டிக்குப் பிறகு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் பொதுக்குழுக் கூட்டமும் 2014 - 15 ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க தேர்தலும், 10.10.2014 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கிளைச் செயலாளர் திரு. கே. ஆதிமூலம் தலைமையில் கிளைச்சங்க கட்டிடத்தில் பொறியாளர் எஸ். ரத்தினசாமி அரங்கில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாநிலத் தலைவர் திரு. என்.எஸ். கௌரிசங்கர் மற்றும் தென்மண்டல செயலாளர் திரு. பி. முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறைவணக்கத்திற்கு பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்துகொண்டனர்.

கிளையின் செயலாளர் திரு. கே. ஆதிமூலம் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார்கள். கிளையின் பொருளாளர் திரு. வி. இராமகிருஷ்ணன் அவர்களால் 2014 - 15 ஆம் ஆண்டிற்க்கான வரவு செலவு அறிக்கை பொதுக்குழுவில் சமர்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், கூட்டத்தில் திரு. ஏ. மோகன்தாஸ், திரு. எஸ். வேல் ஆனந்தராஜ், திரு. எம்.ஏ. ஜவகருதீன், திரு. எஸ்.எஸ். பொற்செழியன், மூத்தப் பொறியாளர் திரு. டி. வீரராஜ் ஆகியோர்கள் விவாதத்தில் பங்கேற்றனர்.

தெற்கு மண்டல செயலாளர் திரு. பி. முத்துசாமி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்கள். பின்னர் மாநிலத்தலைவர் திரு. என்.எஸ். கௌரிசங்கர் அவர்கள் தமது விரிவான உரையில் மையச்சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், மற்றும் உறுப்பினர்களின் பல்வேறு வினாக்களுக்கு பதிலுரை அளித்தார்கள்.

பின்னர் 2014 - 15 ஆம் ஆண்டிற்க்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | : திரு. ஏ. மோகன்தாஸ் |
| உபத்தலைவர் | : திரு. எஸ்.எஸ். பொற்செழியன் |
| செயலாளர் | : திரு. கே. ஆதிமூலம் |
| இணைச் செயலாளர் 1 | : திரு. எஸ். வேல் ஆனந்தராஜ் |
| இணைச் செயலாளர் 2 | : திரு. பி. ராஜேந்திரன் |
| பொருளாளர் | : திரு. வி. இராமகிருஷ்ணன் |

பின்பு பொறியாளர் திரு. எஸ். வேல் ஆனந்தராஜ், நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

**தீர்மானங்கள்:**

1. வெகு சிறப்பாக நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட கிளையின் உறுப்பினர்களும், விழாவினைச் சிறப்பாக நடத்திய மையச்சங்க பொறுப்பாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. பொறுப்பற்ற முறையில் செயல்படும் உறுப்பினர்களுக்கு எதிராக அதிக விமர்சனங்கள் பொறியியல் கதிரில் வெளியிடுவதை குறைத்துக்கொள்ள இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

3. பொறியாளர் சங்கம் நமது சங்க உறுப்பினர்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்குகளில், சரியான விளக்கங்கள் கொடுக்கவும், ஒரு அரசு ஊழியரை பழிவாங்கும் நடவடிக்கைபோல் செயல்படுவதை தடுக்கவும் முயற்ச்சிகள் மேற்க்கொள்ள மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

4. இளநிலை பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நேரடியாக தேர்ந்து எடுக்க தடையாக உள்ள விதி திருத்தங்கள் அரசிடம் பெற முயற்ச்சிகள் மேற்க்கொள்ள மையச்சங்கத்தை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. It is resolved to permit the newly elected secretary that K. Adimoolam and Treasurer that V. Ramakrishnan in to operate the SB Account of Tamil Nadu Engineering Association, Thirunelveli branch in Canara Bank, Palayamkottai Branch.

6. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியமர்த்த, உரிய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக கொள்ளப்படுகிறது.

7. முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிநீக்கம் செய்யப்பட்ட இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிமுறிவுக்கால பிழைப் பொறுத்தல் (Contonation of break in Service) கருத்துருவை அரசுக்கு அனுப்பி உடன் ஆணை பெற்றுத் தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2014 /நாள் 31.10.2014ன் படி 31.10.2014 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | G. சந்திரபோஸ் | இளம் பொறியாளர் |

**இரா. ஏமராஜ்,**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,**
**(ம) தலைமைப் பொறியாளர் (பொது பொ.ப.து.**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:512 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.10.2014)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | N.K. ராமன் | தலைமைப் பொறியாளர் |
| 2. | A. பாலசுப்ரமணியன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | P. கலைச்செல்வன் | உதவி செயற்பொறியாளர் |
| 4. | D. குணசேகரன் | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம். சாய்குமார்**
அரசு முதன்மைச் செயலாளர்

# அக்டோபர் 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

கடந்த 23.09.2014 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., அவர்களது அறையில் நடைபெற்ற குறைதீர்ப்புக் கூட்டத்தில் (Grievance Meeting) நமது பொறியாளர் சங்கத்தின் சார்பாக பொறியாளர்களுக்கு காலமுறை ஊதியம் (Time Bound Pay Scale), பொறியியல் சீர்திருத்தக் குழு (Engineering Reforms Commission) மற்றும் பொறியாளர்களின் நிதிநிலை அதிகாரத்தை உயர்த்துவது (Enhancement of Financial Powers) ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டன. மேலும், மேற்படி கூட்டத்தில், நமது உதவிப் பொறியாளர் சங்கத்தின் சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் வருடா வருடம் உதவிப் பொறியாளர் நியமனம், 2006 - 07 ஆண்டு முதல் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை மற்றும் பதவி உயர்வு அம்சங்கள் மற்றும் பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் இளநிலை பொறியாளர்களின் 25% விகிதாச்சாரத்தில் மட்டும் உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மேற்படி கோரிக்கைகளை முழுவதுமாக பரிசீலித்து ஆவன செய்வதாக முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழில்நுட்ப பணியிடங்களில் இருந்து பணிமாறுதலில் உதவிப் பொறியாளராக அரசாணை எண். 1 பொதுப்பணித்துறை, நாள். 02.01.1990 மூலம் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தி வெளியிடப்பட்ட ஆணையினை எதிர்த்து நமது சங்கங்களின் ஆதரவுடன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கடந்த 07.10.2014 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஈரோடு கிளை:**

G.O. Ms. No. 1-க்கு உரிய Amendment பெறப்படாத காரணத்தாலும், Tamil Nadu Engineering Service Special Rules & Tamil Nadu Engineering Subordiamate Services Rules ஆகியவற்றின்படியும், இது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு மாநில தீர்ப்பாயத்தின் வழக்கு எண். OA No. 4564 / 94-ன் தீர்ப்பின்படியும் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். 7523 / 1997-ன் தீர்ப்புப் படியும், தொழில்நுட்ப உதவியாளர்களை Recruitment by Transfer-ல் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்வது மற்றும் அவர்களது பணிவரன் முறைப்படுத்துவது ஆகியன விதிகளுக்கு புறம்பாக உள்ள நிலையில் மேற்படி நபர்களுக்காக முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து. மற்றும்

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் ஆணைகள் வெளியிடுவது மிகுந்த மன வேதனையும், கவலையும் அளிக்கிறது. இதற்கு நமது எதிர்ப்பினை நமது துறையின் அரசு முதன்மை செயலர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நேரில் சென்று தெரிவிக்கலாம் அல்லது போராட்டம் போன்ற தொடர் நடவடிக்கைகளை எடுக்கலாம் என்ற கருத்து தலைமைச் சங்கத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

G.O. Ms. No. 1 தொடர்பாக வழக்கினை உச்சநீதிமன்றத்தில் விரைந்து முடிக்க ஆவன செய்ய தலைமைச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுவே உதவிப் பொறியாளர்களின் பிரச்சனைகளுக்கு உற்ற தீர்வாக அமையும் என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

---

**Lr. No. 001 / GS - AEA / 2014.50** **Date:13.09.2014**

**To**

The Engineer - in - Chief, WRO and
Chief Engineer (General), PWD.,
Chepauk, Chennai - 600 005.

Sir,

**Sub:** TNPWD - Service Association - Grievance Meeting - Subjects for discussion - Reg.

**Ref:** E-in-C, WRO & C.E. (Gl), PWD Lr. No. S3 (2) / 32049 / 2012 dated:09.09.2014.

We wish to place the following subjects for discussion in the Service Association Meeting to be held on 23.09.2014.

1. Recruitment of Assistant Engineers through TNPSC every year.

2. Promotional avenues and Seniority of 2006 - 07 and subsequent batch TNPSC recruited Assistant Engineers.

**3. Considering re - designated Assistant Engineers against the 25% quota reserved for the Subordinate Service for the post of Asst. Executive Engineer upon promotion.**

We request the Engineer - in - Chief, WRO & Chief Engineer (General), PWD to kindly consider our demands and send necessary proposal to Government for obtaining orders.

Yours truly,

**Er. P. KARTHIKEYAN**
**General Secretary / AEA**

**Lr. No. 001 / GS - AOE / 2014 - 57** **Date: 23.09.2014.**

To

The Engineer - in - Chief, WRO &

Chief Engineer (General), PWD,

Chepauk, Chennai - 600 005.

Sir,

**Sub:** TNPWD - Establishment - Implementation of T.S. Thakur Judgement in Civil Appeal Nos. 10660 - 10662 of 2013 orders - requested - regarding.

**Ref:** Hon'ble Supreme Court of India Judgement dated: 27.11.2013 in Civil Appeal Nos. 10660 - 10662 of 2013 (Arising out of SLP (C) Nos. 31761 - 31763 of 2009)

We submit the following for the kind consideration of the Engineer - in - Chief, WRO & Chief Engineer (General), PWD., Chennai and obtain necessary orders from the Government.

The civil appellate cited in the reference, relates to the prevalent practice of duality of consideration for promotion of re - designated Assistant Engineers to the post of Assistant Executive Engineers. The Assistant Engineers upon re - designation from Junior Engineers are being considered for promotion as Assistant Executive Engineers against 75% quota earmarked for Assistant Engineers based on the seniority fixed in the cadre of Assistant Engineers. Such Assistant Engineers are also being considered for promotion as Assistant Executive Engineers against 25% quota reserved for diploma holder Junior Engineers, if their turn for promotion comes first in the seniority list of Junior Engineers.

The following observations have been made by the Hon'ble Mr. Justice T.S. Thakur and Hon'ble Mr. Justice VikramajitSen of Supreme Court of India in the above civil appellate Judgement dated: 27.11.2013.

i. The procedure followed by the State Government is not sanctioned by any rule and yet is being followed in the name of a convention.

ii. The degree holder Junior Engineers continue to be members of the Subordinate Engineering Service even after they are re-designated as Assistant Engineers upon them getting a degree qualification.

iii. They can, therefore, be considered only against the 25% quota reserved for the Subordinate Service and not against 75% reserved for the State Service members directly recruited to that service or appointed by transfer of the Rules.

iv. To the extent the re-designated Assistant Engineers have been considered in the past for promotion in the quota reserved for Assistant Engineers in the State Service, the consideration was legally bad.

For the observations of the Hon'ble Supreme Court of India made above, we request the Engineer - in - Chief, WRO & Chief Engineer (General) to be kind enough to make necessary proposal to consider the re-designated Assistant Engineers only against the 5% quota reserved for the Subordinate Service for promotion to the post of Assistant Executive Engineer and not against 75% reserved for the State Service members and obtain necessary orders from the Government, at the earliest.

We, also, herewith enclose the copy of the above judgement for your kind consideration.

Encl: Supreme Court of India
Judgement dated: 27.11.2013.

Thank You


Yours,

**Er. P. KARTHIKEYAN**
**General Secretary / AEA**

**Er. R. RAVIRAJ**
**General Secretary / AOE**

Copy to the Principal Secretary to Government, PWD, Fort St. George, Secretariat, Chennai - 600 009 along with the enclose.

## ஒரு காந்திய வாதியின் இழப்பு!
## பட்டயப் பொறியாளர்களுக்கு பேரிழப்பு !



தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் பொள்ளாச்சி என். மகாலிங்கம் அவர்கள் தன் 91 வது அகவையில் சென்னையில் இயற்கை எய்தினார். வாழ்நாள் முழுவதும் வள்ளலாரின் வழியில் வாழ்ந்து, காந்தியின் கொள்கைகளை சொல்லாலும், செயலாலும் கடைப்பிடித்து வாழ்ந்த நெறியாளர். ஒழுக்கசீலர் அக்டோபர் இரண்டாம் தேதியில் காந்தி பிறந்த நாளில் மறைவுற்றது அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அச்சாரமாக அமைந்துவிட்டது.

பி.எஸ்.சி. பட்டதாரியான அவர் 1945ல் கிண்டி பொறியியல் கல்லூரியில் பயின்று **மெக்கானிக்கல் பிரிவில் டிப்ளமா பெற்றவர்.** அந்த பட்டய உணர்வின் காரணமாக பின்னாளில் தொழில் அதிபராக பெருஞ்செல்வந்தராக திகழ்ந்த தருணங்களில், சாமானியக் குடும்பங்களில் பிறந்த இளைஞர்களும் நல்ல கல்வித் தகுதிகள் பெற வேண்டும் என்கிற உயரிய நோக்கில் பொள்ளாச்சியில் 50 வருடங்களுக்கு முன், நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியை தன் தந்தையின் பெயரால் தொடங்கினார். அக்கல்லூரியில் பயின்ற பொறியாளர்களில் பலர் நம் சங்கத்தில் உறுப்பினராக தங்களை இணைத்துக்கொண்டு சங்க வளர்ச்சிக்கு பாடுபடுகிறார்கள்.


1952 முதல் 1967 வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராக சிறப்புடன் பணியாற்றி தொகுதி மக்களிடம் மட்டுமின்றி பல்லோராலும் மதிக்கப்பட்டவர். தமிழக நதிகள் இணைப்பதற்கு தன் கருத்துருகளைச் சொல்லி, இன்று ஊடகங்களில் பெரிதும் அலசப்படும் அத்திட்டத்திற்கு அந்நாளில் வித்திட்டவர்.

அன்னாரின் இழப்பு பட்டயப்பொறியாளர்கள் குடும்பத்தில் ஒரு பேரிழப்பாகும். அவரின் தேசிய உணர்வுகள், நாட்டுப்பற்று, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, கொடைத்தன்மை, சீரிய சிந்தனைகள் அனைத்திற்கும் என்றும் மறைவு இல்லை. தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஆழ்ந்த துயரத்தில் மலரஞ்சலியை கணிக்கையாக்கிறது.

- ஆர். கே. சுந்தரம்
வடபழனி.

## தருமபுரி கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்





# திண்டுக்கல் கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்






# திருச்சி கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்







# தஞ்சாவூர் கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்






# கல்விப் பரிசு திட்டத்தில் கலந்துகொண்டவர்கள்

## 12-ம் வகுப்பு



ஆர்.ர. ஸ்ரீநிதி
த/பெ. வி. சொர்ணம்
காஞ்சிபுரம் கிளை
1144/1200 - 95.3%



எஸ். பிரியங்கா
த/பெ. என். சங்கரன்
திண்டுக்கல் கிளை
1136/1200 - 94.6%

## 10-ம் வகுப்பு



ஆர். ஆர். ஹரினி
த/பெ. ஏ. ரபீந்திரன்
தஞ்சாவூர் கிளை
490/500 - 98%



ச. சவிதா
த/பெ. த. சந்திரன்
வேலூர் கிளை
488/500 - 97.6%



அ. பாலாஜி
த/பெ. அ. அடைக்கன்
திருச்சி கிளை
486/500 - 97.2%



சு. அரவிந்த்
த/பெ. பெ. சுப்ரமணியன்
சென்னை கிளை
483/500 - 96.6%



அ. சுபகார்த்திகா
த/பெ. பெ. அன்பழகன்
புதுக்கோட்டை
469/500 - 96.9%

# பொறியாளர் எஸ். கணபதி கல்விப் பரிசு திட்டம்
# 10-ம் வகுப்பு

## பரிசு பெற்றவர்கள்



முதல் பரிசு
மு. சத்திய செல்வன்
த/பெ. நா. முத்தையா
தேனி கிளை
498/500 - 99.6%



இரண்டாம் பரிசு
வே. ஐஸ்வர்யா
த/பெ. ரா. வேதநாராயணன்
சேலம் கிளை
495/500 - 99%



இரண்டாம் பரிசு
செ. மதுவந்தி
த/பெ. டி. செல்லன்
திருச்சி கிளை
495/500 - 99%



மூன்றாம் பரிசு
ஆர். அக்ஷரா
த/பெ. எஸ். ரதீசன்நாயர்
கன்னியாகுமரி கிளை
494/500 - 98.8%

## நூற்றாண்டு நிறைவு விழாவில் சென்னை குடிநீர் வாரிய டிப்ளமாப் பொறியாளர்கள் யூனியன் வாழ்த்துத் தெரிவிக்கிறது



Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**November 2014**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

## மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற நவம்பர் திங்கள் 15 மற்றும் 16 தேதிகளில் நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் மைய மண்டலம சார்பில் மதுரையில் நடைபெற உள்ளது.

இடம் : ஹோட்டல் தமிழ்நாடு,
அழகர்கோயில் ரோடு, மதுரை - 625 002.
கே. புதூர் அருகில், சங்கம் ஹோட்டல் எதிர்புறம்
ஹோட்டல் பாண்டியன் அருகில்.
போன்: 0452-2537461 (4 **Lines**)

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. **K.** கமால்தீன்
செயலாளர் அமைப்பு & சட்டம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on**
**03-11-2014**

**Postng on**
**05-11-2014**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: **Mr. K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.